முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 26—10—56 வெள்ளி | ஒலி 29

'டெமாஸ்தனிஸ்'

சமீபத்தில் 'முரசொலி'யில் 'ஏர் ஹோஸ்டஸ்' என்ற ஒரு கதை வெளியானதை அன்பர்கள் படித்திருக்கலாம் — அது வெறும் கற்பனை! ஆனால் விமானி — ஏர் ஹோஸ்டஸ் காதல் நாடகம் ஒன்றை—உண்மையில் நடந்தது — பம்பாய் வார இதழ் ஒன்று, சென்ற வாரம் வெளியீட்டிருக்கிறது.

இந்தியன் ஏர்லைன்ஸ் கார்பொரேஷனைச் சேர்ந்த பிரயாணிகள் விமானமொன்று காலை 8–30 மணிக்கு டெல்லியிலிருந்து பம்பாயிக்குப் புறப்பட்டது. விமானம் ஆகாயத்தில் கிளம்பி பறக்கத் தொடங்கிய சிறிது நேரத்திற்கெல்லாம், விமானி அவர் இடத்திலிருந்து பிரயாணிகள் அறைக்கு வந்தார். பிரயாணிகள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். உடனே அவர் மெதுவாக ஏர் ஹோஸ்டசின் அறைக்குள் நுழைந்தார்!

சற்று நேரத்திற்குப்பின் வயதான பிரயாணி ஒருவர் கண் விழித்தார். ஏர் ஹோஸ்டசின் அறையிலிருந்து தணிவான குரலில் பேச்சொலியும், இருவர் 'கல கல' வென்று சிரிக்கும் ஓசையும் கேட்டு மெதுவாகப் போய் எட்டிப் பார்த்தார். ஏர் ஹோஸ்டசும் விமானியும் 'சல்லாபித்'துக் கொண்டிருந்தார்கள். "சபாஷ், விமானி!" என்று, 'சிவ பூஜை'யில் கரடி விட்டார் பெரியவர். காதலர்களின் நிலை...

விமானம் பம்பாயை அடைந்தவுடன் பிரயாணி அதிகாரிகளிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டால் என்ன செய்வது என்று பயந்த ஏர் ஹோஸ்டஸ், விமானி தன்னை பலாத்காரம் செய்து அவமானப்படுத்தியதாக 'ரிப்போர்ட்' செய்திருக்கிருள். விமானத்தில் நடந்த 'அசம்பாவித'த்திற்குக் காரணம் 'ஏர் ஹோஸ்டஸ்'தான் என்று குற்றம் சாட்டியிருக்கிருர் விமானி! விசாரணை நடக்கவிருக்கிறது.

கல்வி கற்ற நல்ல அழகிய இளம் பெண்களைத்தான் ஏர் ஹோஸ்டஸ்களாக நியமிக்கிருர்கள். உடற்கட்டும் திடகாத்திரமுமான இளைஞர்கள்தான் விமானிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள்.

அழகும் இளமையும் அருகிலேயே இருந்து பழகவிட்டு, அசம்பாவிதம் ஏதும் நிகழக்கூடாது என்று எதிர்பார்ப்பது இயற்கைக்கு முரணான செயல்! ஏர் ஹோஸ்டஸ் — விமானி காதல் விளையாட்டுகள், விமானத்தை விபத்துக்குள்ளாக்கும் சூழ்நிலையை உண்டாக்கும் என்பதை நானும் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் இம்மாதிரியான வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரிகள் மனிதக் குறைபாடுகளையும், அவை இயற்கையானவை என்பதையும் மனதில் கொண்டு தீர்ப்பளிக்க வேண்டுமென்பதே என்னுடைய ஆசை!

* * *

பிரபல ஆங்கிலக் கட்டுரையாளரும் பெங்களூர் வாசியுமான பி. கோதண்டராவ் அவர்கள், தேர்தல் பிரச்சாரம் செய்யக் கிளம்புமுன் மந்திரிகள் பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிருர். ஏனெனில் மந்திரிப் பதவியிலிருந்து கொண்டே அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்வது, எதிர்க்கட்சிகளுக்கில்லாத சலுகையையும் செல்வாக்கையும் அவர்களுக்கு அளிக்கிறது என்று குறிப்பிடுகிருர். ஜனநாயகம் வாழ வேண்டும், மக்கள் தங்கள் உரிமைகளைத் தடங்கலின்றிப் பயன்படுத்தத் துணை செய்ய வேண்டும் என்று எண்ணுகின்ற தலைவர்களும் ஆட்சியாளர்களும் செய்ய வேண்டிய காரியமல்லவா அது? ஜனநாயகப் பழக்க முறைகளின் அரிச்சுவடியே தெரியாத — தெரிந்துகொள்ள ஆசைப்படாத — தெரிந்தாலும் திமிர்வாதம் பேசுகின்ற மந்திரிகளின் காதில் கோதண்டராவின் கோரிக்கை ஏறுமா? நம்முடைய 'கனம்'களின் 'தரம்' தெரியாமல் ஜனநாயகக் கொள்கை உபதேசம் செய்யும் கோதண்டராவ் அவர்களுக்கு நம்முடைய ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக!

* * *

நாகர்கள் சுதந்திரப் போராட்டத்தை ஒடுக்க, கிழக்குப் பிராந்தியப் படைத் தலைமையை மேஜர் ஜெனரல் திம்மையாவிடம் டெல்லி ஒப்படைத்திருக்கிறது. திம்மையா நல்ல படைத் தலைவர் என்பதோடு, ராஜதந்திரியுமாவார். துப்பாக்கி துரைத்தனத்தோடு இராஜ தந்திரமும் கலந்தாளுவது, நாகர்கள் வசப்பட மாட்டார்களா என்று நேரு கனவு காண்கிருர்; அவ்வளவுதான்!

பிரிட்டிஷ்காரர்கள் நாகர்களின் விஸ்வாசத்தைப் பெற ஆண்டொன்றுக்கு 30 லட்சம் ரூபாய்கள் செலவழித்தார்கள். ஆனால் நேருவின் 'சுயராஜ்ய' சர்க்கார் ஆண்டொன்றுக்கு 300 லட்சத்திற்குமேல் — மூன்று கோடிக்கு மேல் செலவழிக்கிருர்கள். ஒரு டிவிஷன் படையே நாகர்களை அடக்கும் 'புனித வேலை'யில் ஈடுபட்டிருக்கிறது! காரணம் பிரிட்டிஷ்காரர்கள் நாகர்களின் கலாச்சார உரிமைக்குப் பாதுகாப்பு அளித்தார்கள். ஆனால் இந்த 'ஏக பாரதர்கள்' அனைத்திந்தியாவிலும் ஒரே கலாசாரத்தை மூகிழ்க்க வைக்கும் மேதைகளல்லவா? அதற்காக அவர்கள் கொடுக்கும் விலை மூன்று கோடி ரூபாய்!

* * *

டெல்லி சர்க்கார் காரியாலயத்தில், எஸ். ஆர் ரங்கநாதன் என்பவருக்கு, அவரைவிட அனுபவம் பெற்றோரையெல்லாம் புறக்கணித்துவிட்டு, உதவிக் காரியதரிசி பதவியிலிருந்து காரியதரிசி பதவிக்கு வேலை உயர்வு கிடைத்திருக்கிறதாம், வியாபார—தொழில் இலாகாவில்! ரங்கநாதன் ஒரு ஐ. சி. எஸ்! எத்தனையோ தகுதியுள்ள 'ஐ. ஸி. எஸ்.' அதிகாரிகள் இருக்க இவருக்கென்ன சிறப்பு அப்படி என்று தோழர்கள் வினவலாம்.

'ஸ்ரீமான்' ரெங்கநாத (ஐயங்கார்)னின் மனைவி, நிதி மந்திரி கிருஷ்ணமாச்சாரி அவர்களின் மருமாள்!

விஷயம் விளங்குகிறதல்லவா? இதைத்தான் தோழர்களே ஆங்கிலத்தில் 'நெப்போடிசம்' என்று சொல்லுவது.

டி. டி. கிருஷ்ணமாச்சாரி நிதி மந்திரி ஆனவுடனே, எச். வி. ஆர். ஐயங்கார் ஸ்டேட் பாங்கியின் தலைவராக அறிவிப்பு வருகிறது.

இந்த லட்சணத்தில்தான் டி. டி. கிருஷ்ணமாச்சாரி கோவை தொகுதியில் போட்டியிடப் போவதாக அறிவிக்கிருர். கோவை வாசிகளே, கவனித்து வைத்துக் கொள்ளுங்கள்!

* * *

"இரண்டு இடைத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி தோற்றவுடனேயே, பீகார் — வங்க இணைப்பைக் கைவிட்டு விட்டதாக வங்கப் பிரதமர் பி. சி. ராய் அறிவித்தார். ஆனால் குசரத் — மகாராஷ்டிரத்தில்

❋ 10–ம் பக்கம் பார்க்க

வீரர் சங்கரலிங்கனர் மறைவு

பொதுச் செயலாளர் அனுதாபச் செய்தி

தோழர்களே! எவ்வகையிலும் தமிழர்க்குப் பொருந்திவராத 'சென்னை' மாநிலம் என்ற பெயரைத் தமிழரின் வரலாற்றுக்கும் — நாகரிகத்திற்கும் — பெருமைக்கும் — மதிப்புக்கும் — உயர்வுக்கும் — சிறப்புக்கும் — உணர்ச்சிக்கும்—எழுச்சிக்கும் பொருந்திவரக்கூடிய 'தமிழ்நாடு' என்று மாற்றி அமைக்க வேண்டும் என்பதிலே மங்கா உணர்ச்சி கொண்டு, அதற்காக உண்ணாநோன்பு இருந்து உயிர் ஈந்த விருதை உத்தமர் தோழர் சங்கரலிங்கனார் அவர்களின் மறைவு கேட்டுத் திடுக்கிட்டுப் போனேன்! துக்கத்திலும் துயரத்திலும் ஆழ்ந்தேன்!

தமிழுணர்ச்சி அற்ற — தமிழ்ப் பண்பாடற்ற—தன்மானமற்ற சென்னை மாநில அரசியலாரின் ஆணவப் போக்கு தோழர் சக்கரலிங்கனர் அவர்களின் உயிரைக் கவ்விக்கொண்டுவிட்டது! சென்னை அரசியலார் குடி தழுவிக் கோலோச்சும் நீதி முறையைக் கடைப்பிடித்திருந்தால், தமிழகம் ஒரு சிறந்த உத்தமரை இப்பொழுது இழந்திருக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டிருக்காது. தோழர் சங்கரலிங்கனரை இழந்த தமிழ் மக்கள் இன்று ஆற்ருது அழுத கண்ணீரைச் சிந்துகின்றனர். இவர்கள் ஆற்ருது அழுத கண்ணீர், ஆணவம் கொண்ட இன்றைய ஆட்சியைத் தேய்க்கும் படைக் கருவியாக மாறும்—நல்லாட்சியை நிறுவி, நலம் பயக்கச் செய்யும் என்பது மட்டும் உறுதி!

வீரர் சங்கரலிங்கனர் எந்தக் கொள்கை வெற்றி பெற வேண்டும் என்பதற்காக உயிர் விட்டாரோ, அந்தக் கொள்கையை வெற்றியுறச் செய்வதே நாம் அவருக்குச் செய்யும் இறுதி வணக்கம்! சிறப்பு! எல்லாம் ஆகும்!

தமிழக மக்கள் அனைவரும் அந்த வகையில் இறுதி வணக்கம் செலுத்துவோமாக!

அவரை இழந்து வருந்தும் அவரது உற்ருர், உறவினர், நண்பர், தமிழன்பர்கள் அனைவருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்
பொதுச் செயலாளர், தி. மு. கழகம்

சென்னை 26--10--56 வெள்ளி

இது இவர்கள் நிர்வாகம்!

புவனம் முழுவதும் வியக்கும் நிகழ்ச்சி—பாரதம் எங்கும் பூரிப்பு தரும் செய்தி—சென்ற கிழமை நடைபெற்றிருக்கிறது!

அணு ஆயுதங்களை வல்லரசுகள் கடலில் எறிந்து விட்டால்கூட இவ்வளவு வியப்பு இருக்காது!

ஆனால் பண்டிதர், தான் இனி அதிகம் பேச மாட்டேன்—என்பதை உணர்ந்து விட்டதாகச் செய்திகள் வரும்போதுதான் அந்தச் செய்தி உலக அதிசயங்களுடன் இடம்பெறும் தன்மையைப் பெறுகிறது.

அதிகம் பேசிப் பேசி என்னபலன் கண்டோம். இனிப் பேசாமல்தான் இருந்து பார்ப்போமே.

—என்று சுய விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார், பண்டிதர்!

இந்த அறிவுரை அவருக்குமட்டுமல்ல; அவருடைய 'தொண்டரடிப் பொடி ஆழ்வார்கள்' அனைவருக்குமே பொருந்தும்!

ஒவ்வொரு மாநிலத்திலும் அவருடைய பிரதிபிம்பமாக பல 'வாய்ச்சவடால் வீரர்கள்' உலவுகின்றனர்.

அதன்படி சென்னையிலிருக்கும் சுப்பிரமணியனார் பல சமயங்களில் உண்மைக்குப் புறம்பானவற்றைப் படம் பிடிக்கும்போது 'கோயபெல்ஸ்' போன்றாரையும் தோற்கடித்துவிடுகிறார்.

அந்த தோரணையிலேதான் சில வாரங்களுக்கு முன்பு வீராவேசம் கலந்த தொனியிலே கேள்வி எழுப்பினார்: 'இந்த அண்ணாதுரையால் ஒரு ஐந்தாண்டுத் திட்டம் தயார் செய்ய முடியுமா?' என்று!

—இதே கேள்வியை நிர்வாகத் துறையிலே நிபுணத்துவம் பெற்ற ஒருவர் கேட்டிருந்தால் அதில் நிச்சயம் ஓரளவு பொருள் இருந்திருக்க முடியும்.

ஆனால் கேள்வி எழுப்பியவரோ அணுவளவு விஷயங்களுக்கும் வடக்கே காவடி எடுத்துச் செல்வதற்கு வெட்கப்படாத வீரர்! அவரும் அவரைச் சார்ந்தவர்களும் செலுத்துகிற நிர்வாகப் படகிலோ ஆயிரக் கணக்கான ஓட்டைகள்!

—இந்த நிலையிலேதான் எதிர்க் கட்சிகளைப் பார்த்து 'ஆவர்த்தனம்' பிடிக்க வந்துவிட்டார், ஆச்சாரியாரின் சிஷ்யர்!

'என்ன; எங்கள் நிர்வாகத்தில் ஆயிரம் ஓட்டைகளா? நிரூபிக்க முடியுமா உங்களால்?' — கேள்விகள் பறந்து வரலாம், தேசியக் கூடாரத்திலிருந்து!

அவர்களுக்கெல்லாம் சென்ற 24-ந் தேதி வெளியாகி யிருக்கிற கணக்குத் தணிக்கையாளரின் ரிப்போர்ட்டைத்தான் காட்ட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இதோ அதில் சில முக்கிய விபரங்கள்:

★ ★ விதைகளின் தரத்தை விருத்திசெய்யும் ஒரு திட்டப்படி விவசாய இலாக்கா ஏராளமான அளவுக்கு நெல் 'ஸ்டாக்' செய்திருந்தது. இந்த நேரத்தில் அரிசி விற்பனை பேரிலிருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டு விட்டதால், 1954 ம் ஆண்டுவரை அதிகப்படியான ஸ்டாக் கவனிக்கப்படாமல் கிடந்தது. பிறகுதான் அரசாங்கத்தின் உத்தரவுப்படி அவை விற்கப்பட்டன. இதனால் ஒரு மாவட்டத்தில் ரூ. 44,215-ம், பிறிதொரு மாவட்டத்தில் மட்டும் ரூ. 1,25,256-ம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

ஒரு மாவட்டத்தில் மட்டும் ரூ. 2,765—மதிப்புள்ள 'ஸ்டாக்' குறைவாக இருக்கிறதாம்!

★ ★ ஒரு சமயம் குருவை நெல்லை 16—8—0-விற்கும், சம்பா நெல்லை ரூ 17 8—0 விற்கும் விலைக்குக் கேட்டனர். ஆனால் அரசாங்கமோ அதை அவர்களுக்கு விற்கவேண்டாமென்றும், ரயத்துக்களுக்கு பத்து சதவீதம் அதிக விலைக்கு விதைகளாக விற்கவேண்டுமென்றும் உத்தரவிட்டிருந்தது.

பிறகு 1954-ம் ஆண்டு அரசாங்கம் அவைகளை 'டெண்டர்' முறையில் விற்க முனவந்தது. அப்போது குருவை மூட்டை ஒன்றுக்கு ரூ. 15—4—6-க்கும், சம்பாவை ரூ. 16—5—6-க்கும் அதிகமாக யாரும் கேட்கவில்லை.

முதலில் கேட்கப்பட்ட அதிக விலைக்கே அரசாங்கம் விற்க முன்வந்திருந்தால் மொத்தம் ஏற்பட்ட நஷ்டத்தில் ரூ. 15.344—குறைவாக ஏற்பட்டிருக்கும்!

★ ★ அரசாங்கத்தின் 'கோட்டா' பெற்றிருக்கும் விற்பனையாளர்கள் தாங்கள் உபரி ஜில்லாக்களில் வாங்கிய நெல், அரிசி விலைக்கும், பற்றாக்குறை ஜில்லாக்களில் ஏற்படும் விலைக்கும் கிடைக்கின்ற அபரிமிதத் தொகையை, அவர்கள் சரக்கு பூராவையும் விற்பதற்கு முன்பு அரசாங்கம் அவர்களிடமிருந்து பெற்றுவிட வேண்டுமென்று ஒரு நியதி உண்டு.

இதை அமுலுக்குக் கொண்டுவராத காரணத்தால் அரசாங்கத்துக்கு இன்னும் ரூ. 2,40,616 வரவேண்டியிருக்கிறது.

காலங் கடந்து இவை பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்தபோது அந்த வியாபாரிகளில் இருவர் செத்துப்போய் விட்டதாகவும், இன்னும் ஆறு பேர்களுக்கு அசையும் சொத்துக்கள் இல்லையென்றும் தெரியவருகிறது!

அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய பொருளை உடனடியாக வசூலிக்காத காரணத்தால் ரூ. 35,525 நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் பணம் தரவேண்டிய அந்த இருவருமே செத்துவிட்டார்களே!

மீதமுள்ள ரூ. 2,28,999-ம் அரசாங்கத்துக்குக் கிடைப்பது நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பொறுத்துத்தான் இருக்கிறது!

★ ★ அதிகபட்ச உணவு உற்பத்தித் திட்டப்படி விவசாய இலாக்கா டிராக்டர்களையும், புல்டோசர்களையும் வாங்க திட்டமிட்டது. 1954, ஏப்ரல் 1-ம் தேதி இருந்த திட்டப்படி ரூ. 59·68 லட்சத்துக்கு 159 டிராக்டர்கள் வாங்க முடிவு செய்யப்பட்டது.

இவைகளை வாடகைக்கு விடவேண்டிய பொறுப்பையே அந்த இலாக்கா ஏற்றுக் கொண்டிருந்ததால் நஷ்டம் எப்படியும் ஏற்படாது—என்று முதலில் நம்பப்பட்டது.

ஆனால் 1954 செப்டம்பர் 30 முடிய அரை வருஷத்தில் அரசாங்கத்திற்கு டிராக்டர்களால் ஏற்பட்டிருக்கும் நஷ்டமோ ரூ. 3,89,845 ஆகும். மேலும் இந்தத் திட்டத்தை அமுல் நடத்தத் துவங்கியதால் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 52,32,876 ஆகும்.

முதலில் நஷ்டம் எதுவும் ஏற்படாது என்று முடிவு செய்யப்பட்ட திட்டம் இப்போது இவ்வளவு பெரிய நஷ்டத்தைக் கொடுத்திருக்கிறது!

★ ★ கோழிக்கோட்டில் ஒரு 'ஹைடிரோ ஜெனேஷன்' தொழிற்சாலை ஒன்று நிறுவுவதற்காக 1945-46-ல் அதிகாரம் கொடுக்கப்பட்டது.

தொழிற்சாலை அமைப்பதற்கான இயந்திரங்கள் 1949-ம் ஆண்டிலேயே வாங்கப்பட்டுவிட்டன. இருந்தும் 1953-ம் ஆண்டில்தான் தொழிற்சாலையின் கட்டிட வேலைகள் முடிவுற்றன.

இடையில் 'மார்க்கெட்'டில் ஏற்பட்ட மந்தம் காரணமாக அந்தத் தொழிற்சாலை சரிவர, லாபகரமாக இயங்க முடியவில்லை.

உடனே அந்தத் தொழிற்சாலையை வாடகைக்கு விடுவது—என்று முடிவு செய்யப்பட்டது. இருந்தும் அதை வாடகைக்கு எடுத்துக் கொள்ள தகுந்தவர் முன்வரவில்லை.

தொழிற்சாலை இயங்க ஆரம்பிப்பதற்கு முன்பே ஏராளமான விறகு, நிலக்கரி போன்றவைகள் விலைக்கு வாங்கப்பட்டுவிட்டன.

தேவையில்லாத இந்தச் சாமான்களில் ஒரு பகுதியை விற்றதில் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நஷ்டம் ரூ. 6500 ஆகும். மீதிமுள்ள சாமான்கள் அங்கேயே கெட்டுப் போய்க்கொண்டு இருக்கின்றனவாம்!

—இதுதான் இவர்கள் நிர்வாகத்திற்கு தணிக்கைக் குழுவினர் தந்திருக்கும் நற்சாட்சிப் பத்திரமாகும்!

இவ்வளவு புண்களையும், பேச்சு என்னும் புனுகினால் மறைத்துவிட்டுத்தான் நம்மைப் பார்த்துச் சவால் விடுகிறார், நிதி அமைச்சர்! பாவம்; அவருடைய நிலை கண்டு இரங்குவோம்; பரிதாபப்படுவோம்.

அடித்து ஓசைசெய்தும் வரும் மிருகங்களை ஓட்டுவார்கள்.

பெண்கள் பருவமடைந்தும் தனிக் குடிசையில் எட்டு நாட்கள் வரையில் இருக்கச்செய்து, எட்டாம் நாள் குளித்து, பூ முடித்து ஒரு மனையின் மேலோ, அல்லது சதுரக் கல்லின் மேலோ உட்கார வைத்து, அவள் பக்கத்திலே யாரையாவது ஒரு சிறிய பையனை மாப்பிள்ளைபோல் உடை அணியச் செய்து, அவள் பக்கத்திலேயே உட்காரவைப்பார்கள். பின்பு ஒரு கிண்ணத்திலோ அல்லது கொட்டாங்கச்சியிலோ நல்லெண்ணெய் ஊற்றி தம்பதிகளின் எதிரில் வைப்பார்கள். உறவினர்களும் வந்தவர்களும் இருவர் தலைகளையும் தொட்டு ஆசீர்வதிப்பார்கள். பிறகு சக்திக்குத் தகுந்தாற்போல் விருந்து முடிந்ததும், பெண் எப்பொழுதும் போலவே பழகுவாள். பெண்ணை வீட்டுக்கு அழைத்துக்கொள்ளும் முறை இது.

நீலகிரி வாழ் குறும்பர்....

✻ 10-ம் பக்கத் தொடர்ச்சி

பிறகு அவர்களுக்குத் திருமணம் நடைபெறும். திருமணத்திற்கு சாதாரண உடைதான் அணிந்துகொள்கிறார்கள். ஆண்களுக்கும், பெண்களுக்கும் திருமணத்திற்கென்று தனி வயது கிடையாது. எப்படிப் பிரியமோ அப்படிச் செய்கின்றனர்.

'தாலி' என்ற நாமமே கிடையாது. சுமங்கலியாவென்று தெரிந்து கொள்வது சிரமம். சிறு பெண்கள் மணி அணிந்திருப்பதைப் போல், திருமணமான பின்னும் கழுத்தில் மணிகள் அணிந்திருக்கின்றனர்.

விவாகரத்துசெய்தவளை மறுவிவாகம் செய்கிறவன் அவளுடைய முதல் கணவனுக்கு ரூ. 60-ம், மாமனுருக்கு ரூ. 60-ம் கொடுக்கவேண்டும். கணவன் இறந்த விதவையைத் திருமணம் செய்கிறவனுக்கு இந்த நிபந்தனைகள் கிடையாது. விதவைக்கும் திருமணச் சடங்கு ஒன்றேதான். ஆண்களுக்கு ஒரு மனைவிக்குமேல் இன்று இருக்கக்கூடாது. ஆனால் பெண் பிரியப்பட்டால் கணவனை ரத்து செய்து, மற்ற ஆண்களிடம் கூடி வாழ, பெற்றோர்களே அனுமதிக்கின்றனர்.

குறும்பர்கள் தங்கள் தலைவனை 'முதலி' என்று அழைக்கின்றனர். தலைவனுக்கு ஆண்டுதோறும் அறு நான்கு கொடுக்கவேண்டும். தலைவன் குடும்பத்தில், ஒருவர் பின் ஒருவராக பரம்பரை வரிசையில் வருகிறார்கள். மக்கள் தேர்ந்தெடுப்பதில்லை.

குறும்பரில் சிலர் இறந்தால் மூன்றாம் நாள் எரிப்பதுண்டு; புதைப்பதுமுண்டு. கணவன் இறந்தால் மனைவி தன் காதிலிருக்கும் நகையையும், தன் வலது பக்கத் தலைமயிரையும் எடுத்து முடிபோட்டு இறந்த தன் கணவனின் நெஞ்சில் வைக்கவேண்டும்.

தமிழ் நாட்டில் தமிழ்—மலபாரில் மலையாளம்—மைசூரில் கன்னடம்—இப்படி இடத்திற்குத் தகுந்தாற்போல் மொழிகள் மாறினாலும் இவர்கள் தமிழ் பேசும் குறும்ப மக்களே என்று கருதப்படுகிறது. ஆனால் தமிழ் தமிழனுக்கும், மலையாளம் மலையாளிக்கும், கன்னடம் கன்னடியனுக்கும் இவர்கள் பேசும்போது விளங்குவது கடினம். ஏனென்றால், இவர்கள் மற்ற மொழிகளின் வார்த்தைகளைச் சற்று மாற்றி பொருள் வேறுபட வேகமாகப் பேசுவதால் தாங்கள் பேசுவதை விரோதிகள் உணரமுடியாதல்லவா? இது பண்டைய மக்கள் செய்ததோர் சூழ்ச்சி.

—சிங்கை 'தமிழ் முரசி'ல் பிலோ இருதயநாத் என்ற தோழர் எழுதிய கட்டுரையின் சுருக்கம்.

காதலுக்குக் கண்ணில்லை!

இந்நாடகம் உலகப் புகழ் பெற்ற எழுத்து மன்னர் ஆஸ்கார் ஒயில்டின் "Duchess of Padua" எனும் கருத்தோவியத்தைத் தழுவி எழுதப்பட்டதாகும். தமிழ் நாட்டுக் கேற்ற பெயர்களும், நிலைமைகளும் இணைத்துள்ளேன். பெரும் பகுதியான உரையாடல்கள் நேரடி மொழிபெயர்ப்புகளாகவே இருக்கும். ஆனால் பல இடங்களில் கூட்டல், குறைத்தல் இருக்கும். இதனைப் படிக்கும் நாடகமாகவே எழுதியுள்ளேன். நடிக்கும் நாடகமாக ஆக்க, சில உரையாடல்களில் குறைப்பு வேலை செய்யப்பட வேண்டும். நடிக்கும் விருப்பங் கொண்டுள்ளவர்கள் எழுதிக் கேட்டு, உரிமை பெற்று அக்காரியத்தைச் செய்ய வேண்டுகிறேன். இனி நாடகத்தைப் படியுங்கள். குறையும், நிறையும் கண்டு கூறவேண்டியவர்கள் நீங்கள். ஆகவே நாடகத்தைப் பற்றி வேறு சிறப்பான குறிப்பு ஏதும் கூறவில்லை.

தில்லை வில்லாளன் எம்.ஏ

காட்சி--1

(அழகாபுரியின் இளவரசி பொன் மேனியாளின் பதினாறும் ஆண்டு பிறப்பு விழா.

அதற்காக நாடு முழுவதும் சிறப்பான ஏற்பாடுகள்.

அழகாபுரியின் அரசன் மாமன்னன் வயது முதிர்ந்த கிழவன். அவனுக்கு அடுத்து நாட்டின் தலைவி பொன்மேனியாள்தான். ஆகவே, பிறந்த நாள் விழா ஒவ்வோராண்டும், பெரு விழாவாகக் கொண்டாடப்படும். இப்போதும் அப்படியே!

முரசறைவோன், விழாவைப் பற்றி அறிவிக்கிறான்.

யானை மீதமர்ந்து, பேரிகை முழக்கி, பெருங் குரலெடுத்துக் கூறுகிறான் :

"இதனால், அழகாபுரி மக்களுக்கு அறிவிப்பது யாதெனில், அழகாபுரியின் இன்றைய இளவரசியும், எதிர்கால ராணி மகா தேவியுமான பொன்மேனியாரின் பிறந்த நாள் திருவிழாவையொட்டி, கலைப் போட்டியொன்று நடைபெறும். இதில் பாடத் தெரிந்தவர் பாடலாம். ஆடத் தெரிந்தவர் ஆடலாம். போர்க்களப் பயிற்சியில் வல்லவர் தம் வல்லமையைக் காட்டலாம். வாட் போர் வீரர் வாட்போர் செய்யலாம். மற்போரில் சிறந்தவர் மற்போர் செய்யலாம். எக்கலை பயின்றோரும், அக்கலையில் தம் திறம் காட்டலாம். இளவரசியார் ஏற்ற பரிசில் வழங்குவார். இது மல்லநாடும், புல்லர்நாடும் கொண்ட மாவீரர் மாமன்னர் மன்னர் பிரான் அறிவிப்பு."

—மக்கள் திரள் திரளாகக் கூடி ஒருவருக்கொருவர் போட்டி பற்றிப் பேசுகின்றனர்.)

○

காட்சி--2

(இசையில் வல்லார் இருவர் போட்டியிட்டுக் கொண்டு பாடுகின்றனர்.

ஆடலழகிகள் இருவர் ஆடிடுகின்றனர்.

வீணை வாசித்துக் காட்டுகிறாள் ஒரு வேல் விழி.

மத்தளம் அடித்து, தம் திறம் காட்டுகிறார் ஒருவர்.

வேலைப் பாய்ச்சுகிறான், ஒரு வீரன்.

வில்லெய்து காட்டுகிறான், வித விதமாக ஒரு மறவன்.

இப்படிப் பற்பலக் கலை கற்றோரும், போட்டியில் கலந்து கொள்ள பயிற்சி செய்கின்றனர்.

கடைசியாக இரண்டு வாள்கள் ஒன்றையொன்று மோதுகின்றன. அத்தகைய வாட்போரை இரு வாலிபர்கள் செய்கின்றனர். போர் வெகு மும்முரமாக நடைபெறுகிறது. கடைசியில் ஒருவன் வெற்றி பெறுகிறான்.)

நகைமுகத்தான் : ஆளவந்தா, அரசியாரின் பரிசில் உனக்குத்தான்.

ஆளவந்தான்: வரும் பரிசிலில் பாதி உனக்குத்தான், நண்பா

நகை: கொடுக்கக் கூடியதைக் கொடுத்தால்தானே, பாகம் போட்டுத் தருவாய்! .

ஆள: குறும்பு உன் கூடவே பிறந்தது போலும்! கொடுக்க முடியாததை அரசி எப்படித் தரமுடியும்?

நகை: எப்படியா? அரசி, அழகே உருவான ஆரணங்கு — எழிற் பேழை — தங்கப் பதுமை—பெயரோ, பொன் மேனி.

ஆள: எட்டாத பழத்திற்கு எப்போதும் ஆசைவைத்து கொட்டாவிவிடும் வீணனடா நீ. சரி, சரி, அடுத்த போருக்கு ஆயத்தமா?

நகை: ஓ, நான் தயார்.

○

காட்சி--3

(அரசி பொன்மேனியாள் அமர்ந்திருக்கிறாள், அவள் பக்கத்தில் கிழ மன்னன் மாமன்னனும் அமர்ந்திருக்கிறான். மற்ற அரசப் பிரதானியர் அனைவரும் அமர்ந்திருக்கின்றனர்.

போட்டிக் களத்தில் ஆளவந்தான் நிற்கிறான்.

வாட் போர் முதலில்—அதில் எதிர்த்துப் போரிட்டவர் அத்தனை பேரும் தோற்றோடுகின்றனர்.

சொருகு வாள் போர் அடுத்து — அதிலும் அவனே வெற்றி மாலை சூடுகிறான். குத்துச் சண்டை செய்கிறான்— அதிலும் அவனே பலவான் என நிற்கிறான். இப்படை, போர்க்களங் கொண்டு செய்யும் போட்டிகள் ஒவ்வொன்றி

※ தொடர்ச்சி 8–ம் பக்கம்



நாடகம்

காட்சி: 7

(சமயோஜிதம் பிள்ளை வீட்டுக் கூடம். ஆணமூஞ்சிப் பிள்ளையின் மானேஜர் சங்கரலிங்கம் நின்று கொண்டிருக்கிறார். சமயோஜிதமும் பலவேஷமும் வருகிறார்கள்.)

சங்கரலிங்கம்: நமஸ்காரங்க!

சமயோஜி: நமஸ்காரம்! ஜேஹிந்த்!... என்னய்யா நீரா?...நான் பயந்தே போய்ட்டேன், சங்கரலிங்கம்னு சொன்னவுடனே...எனக்கு அந்த உண்ணாவிரதியின் ஞாபகம் வந்துட்டுது!...

சங்: யாருங்க அது?...உண்ணாவிரதி? ஒண்ணும் புரியலியே!......சமீபத்திலே மொரார்ஜி தேசாய்தான் உண்ணாவிரதம் இருந்தார்!

சம: சரிதான் போ! அவர் உண்ணாவிரதம் இருந்துதான் நேருஜி கலங்கிப் போய் உண்ணாவிரதத்தை நிறுத்தச் சொல்லிவிட்டாரே!...

பலவே: அவரு எங்க சொன்னாரு?.........தேசாயியே அவரே நிறுத்திட்டார்!...

சம: அட சும்மா இரய்யா சப்தம் போட்டுக்கிட்டு... அப்படின்னா சங்கரலிங்க நாடார் உண்ணாவிரதம் இருந்த விஷயமும் அவர் செத்துப்போன விஷயமும் சரியாகவே விளம்பரம் ஆகலியா?...பேஷ்! பேஷ்!!

பலவே: எப்படிங்க விளம்பரம் ஆகும்?...காங்கிரசின் அக்கிரமங்களை எதிர்த்து காங்கிரசுக்குள்ளேயே ஒருத்தன் உண்ணாவிரதம் இருக்கிறதுன்னா......அதை நம்ப பத்திரிகைகளான மித்திரன், தினமணி, விடுதலை முதலியவைகளில் விளம்பரப் படுத்துவார்களா?...

சம: சபாஷ்! அப்படித்தான் இருக்கும்! நல்லவேளை. சங்கரலிங்கம் சாவு சரியாப் பரவாமல் போச்சு! ...பரவினல் எலக்ஷனிலே நம்ப பாடு ஆபத்தய்யா!...

பல: எழுபது நாளைக்குமேல் உண்ணாவிரதம் இருந்தார்—அப்பாவி; பாவம்!... ஏனென்று கேட்கவில்லை அரசாங்கம்! உடம்பு அணு அணுவாகத் தேய்ந்து, உயிர் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரிந்து கொண்டேயிருந்தது! கவலைப்படவில்லை நம்ம காங்கிரஸ் சர்க்கார்! கடைசியில் தமிழ் நாட்டு பொட்டி ஸ்ரீராமுலுவாக ஆனார் சங்கரலிங்கம். பலன் என்ன? ஸ்ரீராமுலு செத்ததும் ஆந்திராவில் ஆத்திரம் பிறந்தது—தெலுங்கர்கள் கொதித்தனர். இங்கே தமிழர்கள் பரம சாதுக்கள்!...சங்கரலிங்கம் நாதியற்றுப் போனார், பாவம்!...மூளையில்லாத மனுஷன்—காங்கிரசைப் போயி குற்றம் சொல்லலாமா?...

சம: எப்படியோ விளம்பரமில்லாமல் போச்சு; அதுவரையில் சந்தோஷம்! இல்லா விட்டால் எதிர்க் கட்சிகளுக்கு பதில் சொல்ல நம்மால் முடியாமல் போயிருக்கும்...

பல: நாம் ஏனுங்க பதில் சொல்லணும்—எதிர்க் கட்சிகளுக்குப் பதில் சொல்லத்தான் ஒரு பெரிய மனிதரையே வளைத்து வைத்திருக்கிறதே காங்கிரஸ்!... அவர் பார்த்துக் கொள்வார் அதெல்லாம்.

சம: யாரையா சொல்றே?

பல: அதான் பெரியார்!...... சங்கரலிங்க நாடாரைப் பற்றி அவர் என்ன சொன்னார் தெரியுமோ?...

சம: என்ன சொன்னார்?...

பல: காமராசரை ஆதரித்துக் கொண்டிருக்கும் பெரியார் சங்கரலிங்க நாடார் இறந்ததைக் கேள்விப்பட்டதும் காமராசரை அலைகடல் துரும்பாக ஆக்கிவிடுவார் என்றுதான் காங்கிரஸ் வட்டாரமே அஞ்சியது!... ஏனென்றால் ஒரு ஏழைத் தியாகியின் கோரிக்கைகளை அலட்சியப் படுத்தியதோடு, உயிர் போவது பற்றியும் கவலைப் படாமல் உல்லாசமாக ஊர் சுற்றி வருகிறாரே காமராசர்; அதைக் கண்டால் நியாயத்துக்குப் போராடுவதாகக் கூறும் பெரியார் கொதிப் படைந்து குமுறி எழுவாரே; என்றுதான் நாடு முழுவதும் எதிர்பார்த்தது! நீங்ககூட கொஞ்சம் பயந்தீங்க பெரியாரைப் பற்றி! ஆனா நாம் பயந்த படியில்லாமல் சங்கரலிங்கனாரின் சவத்தை அலட்சியப் படுத்திவிட்டார் நம்ப பெரியார்!

சம: அப்படியா சங்கதி! என்ன இருந்தாலும் பெரியார் பெரியார்தான்! அந்த தி. மு. கழகத்தார்களைப் போல இல்லாமல் காலத்தை அனுசரித்து நடக்கிறார். அதிருக்கட்டும்; பலவேஷம்! பெரியார் சங்கரலிங்கத்தைப் பற்றி என்ன சொன்னார்?

பல: அவர் சங்கரலிங்கத்தைப் பற்றி சொன்னதைவிட காமராசரைப்பற்றி சொல்வதுதானே அதிகம்!...... சங்கரலிங்கம் ஒருமூட்டை கோரிக்கைகளை நீட்டினாராம்! அதனால்தான் அவைகளை நிறை வேற்றி வைக்க முடியாமல் போய் விட்டதாம்.

சம: மூட்டை கோரிக்கையா? என்னென்ன?...

பல: சென்னை ராஜ்யத்துக்குத் தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்பது முதல் கோரிக்கை! ....

சம: சே சே சே!......தமிழ் நாடுன்னு பேர் வைக்கிறதா?.........ஏன் அந்த ஆளுக்குத் தமிழ் மேல அவ்வளவு பக்தி? அட முட்டாளே; இதுக்காகவா வீணா உயிரை விட்டான்!... ஏனய்யா; இந்த கோரிக்கை நம்ப பெரியாருக்குக்கூட பிடிக்குமே! அதுக்காக அவர் ஒரு போராட்டம்கூட நடத்தப் போகிறதாகச் சொன்னாரே!...

பல: போராட்டமாவது; ஒண்ணாவது; அதெல்லாம் தினத் தந்தி கார்ட்டூனுக்காகத் தரப்படுகிற விஷயதானம்; அவ்வளவுதான்! தமிழுக்காகப் போராடி தாலமுத்து நடராசன்னு

நவம்பர் இதழ்

நவம்பர் முதல் வாரம் விற்பனைக்குக் கிடைக்கும்!

★ இது ஒரு இலக்கியக் கருவூலம்—
★ சிறு கதைச் செல்வம்—
★ சிந்தனைச் சித்திரம்—எனச்
★ சொல்லத்தக்க செந்தமிழ் மாத ஏடு

★ உவகை தரும் கேலிச் சித்திரங்கள்!
★ உரிமை வேட்கை தரும் கட்டுரைகள்!
★ இலக்கிய அருமை சொல்லும் சிறுகதைகள்.
★ கருணாநிதி தரும் கவின்மிகு 'கவிதை சிறுகதை'!
★ மற்றும், காவியம், ஓவியம் கொண்ட சற்கண்டுக் கட்டி.

சென்ற மாதப் பட்டியல் தொகை இதுவரை அனுப்பாத விற்பனையாளர்களுக்கு, நவம்பர் இதழ் அனுப்பப்படமாட்டாது என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

முத்தாரம்; தபால் பெட்டி நெ. 712, சென்னை-6

கதவில்லா காங்கிரஸ்!

காங்கிரஸ் கட்சிக்கு இன்று கதவு இல்லை; உள்ளே எவர் எவரோ 'காதலர்'களாக உள விக்கொண்டிருக்கிறார்கள்! கதவு இருந்தாலும் தாள் இல்லை; இருந்தாலும், தாள் போடப் பட்டிருக்காது; போட்டிருந்தாலும், தட்டினால் திறக்கப்படும்!

இரண்டு பேர் செத்தார்களே; அதைக் கண்டு பெரியார் எவ்வளவு சீறியெழுந்தார், ஆச்சாரியார் மீது!...இப்போது மட்டும் தமிழ் நாடு என்ற பெயருக்காக செத்த சங்கரலிங்கத்தைக் குற்றம் சாட்டுகிருரே, ஏன்?...

சம: ஏன்; எனக்கும் புரியவில்லை!...

பல: என்னைக் கேட்கிறீர்களே; இதெல்லாம் காமராசரைக் கேட்க வேண்டிய கேள்வி!...

சம: ஓகோகோ!... சரிதான்! சரிதான்! காமராசரை ஆதரிக்கிற வேகத்திலே சங்கரலிங்கத்தை இடறி எறிகிருர்; இல்லையா?...

பல: ஆமாம்; மந்திரிகளுக்கு சம்பளம் குறைக்கப் படவேண்டும்– ஆடம்பரங்கள் கூடாது—விருந்துகளில் மது வகையருக்கள் கூடாது—இது போன்ற கோரிக்கைகள் பெரியாருக்கு உடன்பாடுதான்; ஆனாலும் எதிர்க்கிருர் இப்போது!

சங்: ஏன்?

பல: எதையும் தான் மட்டுமே சொல்ல வேண்டும்; தான் மட்டுமே செய்ய வேண்டும்; மற்றவர்கள் அதே காரியத்தில் ஈடுபடுவது அவ்வளவாக அவருக்குப் பிடிக்காது!...

சம: அப்படின்னு தி. மு. கழகம், காமராசரை ஆதரித்தால் பெரியார் ஆதரித்திருக்க மாட்டார்; இல்லியா?...

பல: போன தேர்தலிலே தி. மு. கழகம் காமராசரை ஆதரிக்காம இருந்த போதே; அவரைக் கண்ணீர்த் துளிகள் ஆதரித்தார்கள் என்று அவர்கள்மீது பழி சுமத்தியவராயிற்றே பெரியார்! அப்படிக் காமராசரை தீவிரமாகத் தாக்கியவர்தானே இன்று தெய்வம் போல் பாவித்துப் பிரச்சாரம் செய்கிருர்!

சம: ஓய், பலவேஷம்! நீர் பேசுவதைப் பார்த்தா காமராசரையும் பெரியாரையும் தாக்குகிற ஜாடை தெரிகிறதே; ஏன், என்ன விசேஷம்? ஒரு வேளை நீர் ராஜாஜி கோஷ்டியோ?

பல: அய்யய்யோ; நான் எந்தக் கோஷ்டியும் இல்லீங்க!......நமக்கு ஏங்க கோஷ்டி யெல்லாம்!...... ஏதோ "ஊர் ரெண்டு பட்டால் கூத்தாடிக்கு எளிது"ன்னு பழமொழி சொல்வாங்களே; அது மாதிரி என் பிழைப்பு!... என்னமோ என் மனசில பட்ட உண்மைகளை உங்ககிட்ட சொன்னேன். நமக்குள்ளே பேசிகிட்டா என்ன?...

சம: இல்லய்யா, எனக்கு அந்த சங்கரலிங்கம் செத்தது கொஞ்சம் கவலையாப் போச்சு!...

பல: ஆமாங்க பாவம்; காங்கிரசிலே ரொம்ப கஷ்டப்பட்டு ஜெயிலுக்கெல்லாம் போன மனுஷன்!...துடியாத் துடிச்சு மனசு ஒடிஞ்சு செத்துப்போய்ட்டான்னு; கவலையிருக்காதா? எனக்குக்கூட ரொம்ப கவலைதானுங்க!

சம: அட; அந்தக் கவலையில்லையா! எலக்ஷனிலே காங்கிரசை கொஞ்சம் பாதிக்குமேன்னு கவலைப் பட்டேன்ய்யா நான்!... அவ்வளவுதான்!...

சங்: ஆமாம், நீங்க பாட்டுக்கு மூச்சுவிடாம பேசிக்கிட்டே யிருக்கீங்களே; செத்துப் போன சங்கரலிங்கத்தைப் பத்தி—என்னைக் கொஞ்சம் கவனிங்க; உயிரோட இருக்கிற சங்கரலிங்கத்தை!...

பல: உனக்கு என்ன கோரிக்கைய்யா?

சங்: அய்யா கடிதம் கொடுத்திருக்கிருர்னு அப்பவே சொன்னேனே...

சம: ஓகோகோ.........அதை மறந்துட்டேன்...கொடும்! கொடும்!!

(கடிதத்தை வாங்கிப் படிக்கிருர். முகம் மாறுகிறது...)

சம: மானேஜர்! நீர் போகலாம்...

சங்: பதில் வாங்கிட்டு வரச் சொன்னுங்களே; அய்யா!

சம: அப்புறம் கொடுத்தனுப்புகிறேன் பதில்!...

(மானேஜர் சங்கரலிங்கம் போகிருர்)

சம: பலவேஷம்! காரியம் ரொம்ப மோசமாப் போச்சு!...

பல: என்னுங்க?

சம: ஆனைமூச்சிப் பிள்ளை ரொம்ப ஆத்திரமா எழுதியிருக்காரு!...கண்ணம்மா கல்யாணத்தைப்பத்தி உடனே முடிவு தெரியணுமாம்; இல்லாவிட்டால் ....எலக்ஷனுக்கு டிக்கெட்டே கிடைக்காம செய்து விடுவாராம். அதைப்போல ஜாடையா எழுதியிருக்கார்!...

பல: எலக்ஷன் டிக்கெட்டுக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம்?... ஏதேது இந்த அய்யருங்க மோட்சம் வேணுமா, நரகம் வேணுமான்னு பயமுறுத்துகிற மாதிரியில்ல இருக்கு சமாச்சாரம்!

சம: அது கிடக்கட்டுமய்யா— இப்ப என்னவழி?... எலக்ஷனுக்கு நான் நின்றே தீரணும்– அதுக்கு பணமும் வேணும்! கண்ணம்மாவோ கண்டிப்பாக இருக்கிருள். என்ன செய்யலாம்?...

பல: நான் ஒண்ணு சொல்றேன், கேக்கிறீங்களா?...

சம: சொல்லு!

பல: உங்க எலக்ஷன் சம்பந்தமா எல்லா விவகாரங்களையும் என் பொறுப்பிலே ஒப்படைத்து விடுங்கள்......எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்!

சம: சரி; உன் இஷ்டப்படி செய்!...

[பலவேஷம் பல் இளிக்கிருன். சமயோஜிதம் நிம்மதி]

[திரை விழுகிறது.]

—(தொடரும்)

அறிவிப்பு

தவிர்க்க முடியாததும் எதிர்பாராததுமான இடையூறுகளால் சில வாரங்களாகக் காலந்தாழ்ந்து வரும் 'முரசொலி' இனிவரும் இதழ்களில் இருந்து வெள்ளிக்கிழமையே வெளிவந்துவிடும் என்பதை அறிவித்துக்கொள்கிருேம்.

—ஆசிரியர்.

தயாராகிறது!

*

நவம்பர் முதல் நாள் விற்பனைக்குக் கிடைக்கும்!

'ரங்கோன் ராதா'

[வசனப் புத்தகம்]

அறிஞர் அண்ணுவின் பொன்னேவியம் மு. கருணாநிதியின் வசனத்துடன் நெஞ்சை அள்ளும் கொஞ்சு தமிழ்க் காவியமாய் புத்தக வடிவில் வருகிறது!

'ரங்கோன் ராதா'

விலை 8 அணு — விற்பனைக் கழிவு 40 சதவீதம்

தேவையான பிரதிகளுக்கான கமிஷன் கழிந்த முன்பணத்தை உடன் அனுப்பி வைக்க வேண்டுகிருேம். அல்லது தேவையான பிரதிகளை தெரிவித்தால் வி. பி. யிலும் அனுப்புகிருேம். உடனே பதிவு செய்துகொள்ள வேண்டுகிருேம்.

முரசொலி பதிப்பகம், :: சென்னை 6.

காதலுக்குக் கண்ணில்லை....

●●● 5-ம் பக்கத் தொடர்ச்சி ●●●

ளும் அவன் வெற்றி பெறுவதைக் கண்டு இளவரசி முகம் மலர்கிறது. மனம் நெகிழ்கிறது.

ஆளவந்தானுக்கு, தங்க வாள் ஒன்றைப் பரிசளிக்கிறாள்.)

பொன்மேனியாள்: அவையோர்களே! என் பிறந்த நாள் விழாவை, இவ்வளவு பெரும் மகிழ்வுடன் கொண்டாடும் அழகாபுரி மக்களுக்கு என் அன்பு கலந்த நன்றி—என்னிடம் காட்டும் அன்பிற்கும், பரிவிற்கும் நான் என்றும் கடமைப் பட்டிருக்கிறேன். பிறந்தநாள் விழாவையொட்டி நடந்த போட்டிகளில், வெற்றி பெற்ற ஆளவந்தானுக்கு, எனது சிறப்புப் பரிசாக, இந்தத் தங்க உடைவாளைப் பரிசளிக்கிறேன். வாள் வீரன் என்ற பட்டத்தையும் அளிக்கிறேன்.

(ஆளவந்தான், இளவரசி முன் வருகிறான். அவள் எழில் முகத்தையே உற்றுப் பார்க்கிறான். அவளும் அவனுடைய வனப்பைக் கண்டு ஒரு கணம் திகைக்கிறாள் — மறு கணம் மனதிற்குள்ளே நகைக்கிறாள். பிறகு வாளைத் தருகிறாள்.

அவையோர், குதூகலத்தால் ஆளவந்தானைப் பாராட்டி கை தட்டுகின்றனர்.

"வாள் வீரன் ஆளவந்தான் வாழ்க' —"இளவரசி பொன் மேனியாள் வாழ்க" என்று முழங்குகின்றனர்.)

○

காட்சி--4

(அறநாட்டின் காவலன் புலிவலன். அவனுக்கு உளவு கூறுவோர் மூவர்-பொய்யன், புரட்டன், புறங்கூறுவோன்.

புலிவலன் இங்கும் அங்கும் நடந்தபடி யிருக்கிறான்.)

பொய்யன்: மன்னவரே, அழகாபுரி என்ற பெயர் ஏன் ஏற்பட்டது என்பதே, அந்நாட்டு இளவரசியாம் எழிலரசியைக் கண்டபிறகுதான் புரிந்தது.

புரட்டன்: அவள் பொன்மேனியாள் — பொன்னுக்கே பெருமைதரும் ஒளி வீசும் உடல் படைத்திருக்கிறாள். அவள் எழிலுக்கு இலக்கணம் சொல்லிக் கொடுக்கிறாள்.

புறங் கூறுவோன்: அந்த ஏந்திழை இருக்க வேண்டிய இடம், அறநாட்டு அரசு கட்டில், மன்னவா.

புலிவலன்: அத்தகைய அழகியைத்தான் நான் இதுநாள் வரை தேடிக் கொண்டிருந்தேன்—இப்போது கிடைத்து விட்டாள்! இனி அவள் என் பட்டத்தரசி—இதில் சந்தேகமில்லை.

பொ: சந்தேகமில்லாவிட்டாலும் சங்கடமிருக்கிறது, மன்னவா.

பு: புலிவலன் நினைத்து விட்டால், சங்கடம் சகடமாக உருண்டோடிவிடும்.

புற: அவள் தந்தையோ, அவள் வாயசைவே வேதமாகக் கருதுபவன்.

பு: அவள் என்னை விரும்ப மாட்டாள் என்று கூறுகிறாய்?

புற: அப்படியில்லை, அரசபெருமானே — அவள் வயதிலோ சிறியவள் — தங்கள் பெருமை தெரியாது—வயது மட்டுமே தெரியும்—ஆகவே மறுக்கவும் கூடும்.

பு: காரணங்கள் கூறி காலத்தைக் கடத்த வேண்டாம்—அந்தப் பேரழகி, என் பட்டத்தரசியாக வேண்டும் — அதற்கு வழியிருந்தால் சொல்லுங்கள்.

பொ: அந்தக் கிழ மன்னனுக்கு எல்லா ஆசையும் மடிந்து விட்டாலும், மண்ணாசை மட்டும் மடியவே இல்லை.

புர: ஆகவே, அந்தப் பேரழகிக்கும் உங்களுக்கும் திருமணம் நடந்தால், நாம் நாட்டின் சில பகுதிகள் தருவோம் என்று பேசினால், அவன் ஒப்பக்கூடும்.

பு: பெண்ணுக்காக, மண்ணைத் தருவோம் — தருவதாகச் சொல்வோம் — பிறகு பார்த்துக் கொள்வோம்.

புற: அப்படியானால், மணப் பேச்சு நடத்த ஒருவரை உடனே அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள்.

பு: ஏன், பொய்யனே போய் வரட்டும்!

பொ: தங்கள் கட்டளை, மன்னவா.

(மூவரும் வெளியேறுகின்றனர். மன்னன் மட்டும், இங்கும் அங்கும் நடந்தபடி யிருக்கிறான்.)

○

காட்சி--5

(அந்தப்புரத்தில், இளவரசி தன் கட்டிலில் படுத்துறங்குகிறாள்.

கனவு காண்கிறாள்—பொன்மேனியாள் எழுந்து நடந்து செல்கிறாள். அவள் பின்னே ஆளவந்தான் வருகிறான். திரும்புகிறாள். ஆளவந்தான் கையிலே வாளோடு நிற்கிறான். வாள் மாலையாகிறது. மாலையை அணிவிக்கச் செல்கிறான். அம் மாலையை அறுத்துக் கொட்டுகிறது வேறொரு வாள். அவ்வாளைப் பிடித்து நிற்கும் விகாரமான மனிதனைப் பார்க்கிறாள். கண்களை மூடிக் கொள்கிறாள். ஆனால், அவ்வுருவம் அவளைக் கரகரவென இழுத்துச் செல்கிறது. கையை உதறுகிறாள். அவ்வுருவத்தின் வாளைப் பிடுங்கி அவ்வுருவத்தைக் கொல்கிறாள். திரும்பி ஆளவந்தான் இருந்த இடத்திற்கு வருகிறாள். உதிர்ந்த மலர்ச் சரம் கிடக்கிறது. ஒன்றுக்குகிறாள். பிறகு வாளை உயர்த்துகிறாள், தன்னைக் கொன்று கொள்ள—இந்த நேரத்தில் திடுக்கிட்டு விழித்துக் கொள்ளுகிறாள். இங்குமங்கும் ஓடிப் பார்க்கிறாள். பிறகு கனவெனக் கண்டு வருந்துகிறாள்.)

○

காட்சி--6

(பொய்யன் மன்னன் மாமனுனிடம் பேசுகின்றான்.

இருவரும், இரண்டு தங்கத் தவிசில்களில் அமர்ந்திருக்கின்றனர்.)

பொய் :மன்னவரே, தங்களின் திருக்குமாரியின் திருமண நினைவாக, எம்மரசர் புலிவலர் மூன்று பேரூர்களைத் தர சித்தமாயுள்ளார்.

மாம : அழகாபுரிக்கு இன்னும் மூன்று பேரூர்களும் வந்து சேருமா ?

பொ : அதில் சந்தேகமென்ன? பேரூர்களென்றால், சாதாரண ஊர்களா என்ன ? எல்லா வளங்களும் நிறைந்தவை — மண்ணூர் காட்டு வளம் கொண்டது. பெண்ணூர் கேளிக்கை நலம் சூழ்ந்தது. பொன்னூர் பொருள் வளம் செழித்தது.

மா: ஆகா, அப்படியா?

பொ: திருமணம் நடைபெறட்டும்—பிறகு பாருங்களேன், அழகாபுரிக்கு வரும் அளவிடற்கரிய சிறப்புகளை.

மா: என் நாடு வளர்ந்தால், என் மனம் மகிழும். என் நாட்டு எல்லை வளர்ந்தால், என் உள்ளம் குளிரும். திருமணத்திற்கு சம்மதம் என்று தெரிவித்துவிடும், உமது மன்னனிடம்.

பொ: சம்மதம் பெறமட்டுமல்ல—சகல ஏற்பாடுகளும் செய்யும் பொறுப்புகளையும் ஏற்று வந்துவிட்டேன்—ஆகவே, நாளையும் குறிப்பிட்டு விடுவோம்.

மா: தாராளமாக!

○

காட்சி--7

(ஆளவந்தானும், நகை முகத்தானும், பரிசு பெற்ற வாளைப் புரட்டிப் புரட்டிப் பார்க்கின்றனர்.)

ஆள: வாளைப் பெற்றேன்—ஆனால், அவளைப் பெறும் பாக்கியம் எனக்கில்லை.

நகை: (சிரித்தபடி) எட்டாத பழத்தை எண்ணிக் கொட்டாவி விடும் வீணனடா நீ.

ஆள: எட்டாத பழமாக இருக்கட்டும் — நான் நொண்டியல்ல—மரமேறிப் பறித்துக் கொள்வேன்!

நகை: ஆளவந்தா, அரசிக்கு மணம் பேசி முடிவாகி விட்டது!

ஆள: யார் அவளை மணப்பது?

நகை: அறநாட்டு மன்னன் புலிவலன்.

ஆள: புலியின் கையில் புள்ளிமான்!

நகை: இல்லாவிட்டால் இந்தப் பூனையின் கையிலா மானைத் தருவார்கள்?

ஆள: யாரடா, பூனை?

நகை: நண்பா, நீ அரசர் குலத்தில் பிறந்த அரசிளங் குமரனு, அவளிடம் ஆசை கொள்ள! அவளை மணப்பதென்றால், உன்னையும், என்னையும் போன்ற ஆண்டிகளால் முடியுமா?

ஆள: காதல், அரசன் ஆண்டியென்று பேதம் பார்த்து வருவதல்ல — எங்கும் ஒளி பரப்பும் நிலவொளி.

நகை: ஏட்டுச்சுரை, கறிக்காகாது.

ஆள: ஆகிறதா இல்லையா என்று பார்க்கிறேன்.

நகை: பொன்மேனியாள்—புலிவலன் திருமணத்தைத் தானே பார்க்கப் போகிறாய்—தாராளமாகப் பார். அரசாங்கத் திருமணம்—உனக்கும், எனக்குமா அழைப்பு வரப்போகிறது? அழையாத வீட்டிற்கு, நுழையும் விருந்தினனாக இன்றே போய் பாரப்பா. மேளதாளத்தோடு, கோலாகலமாக, விருந்து வேடிக்கையோடு திருமணம் நடைபெறும்.

○

காட்சி--8

(மேளதாள முழக்கத்தோடு புலிவலன், பொன்மேனியாளுக்குத் தாலி அணிவிக்கிறான். வேத ஒலி, வேள்விப் புகை. புரோகிதர் கூட்டம், விருந்தினர் ஆயிரமாயிரம்—எல்லாம் சூழ திருமணம் நடைபெறுகிறது.) (தொடரும்)

சென்னை மாவட்டத்தில்

தேர்தல் ஆய்வுக் குழுவின் விசாரணை

28—10—56 ஞாயிறு காலை 'அறிவக'த்தில் நடைபெறும்

சென்னை மாநிலத்திலுள்ள எல்லாத் தொகுதிகளின் தேர்தல் சூழ்நிலையை அறியத் தேர்தல் ஆய்வுக் குழுவினர் 28—10—56 காலை 9-மணிக்கு. இராயபுரம் 'அறிவக'த்தில் தங்களின் பணியைத் துவக்குவார்கள்.

ஒவ்வொரு தொகுதியிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்கள். மாவட்டப் பிரதிநிதிகள் கழகத் தோழர்கள். ஆதரவாளர்கள். தேர்தல் சூழ்நிலையை தெரிவிக்கக்கூடிய முக்கியஸ்தர்கள் அனைவரும் ஆய்வுக் குழுவின் முன் தங்களின் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். —தலைமைக் கழகம் (தி. மு. க.)

'துப்புகெட்டவர்கள்' துரைத்தனத்தில்!

பொதுப் பணம்— அது ஒரு ரூபாயாக இருந்தாலும், அதை ஆயிர ரூபாயாக நினைத்து, பொறுப்புடன் பாதுகாக்க வேண்டிய கடமையுணர்ச்சியைப் பெறுகிறது!

அரசாங்கப் பணியாளன்— இவர்கள் பொது மக்களின் 'கார்டியன்'; அவர்கள் தரும் ஒவ்வொரு சல்லிக் காசையும் கண்ணின் பாவைபோல் காத்து, பக்குவமறிந்து, தேவையுணர்ந்து செலவிட வேண்டிய மிகப் பொறுப்பு வாய்ந்த பணி இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

அமைச்சர்கள் —ஊர் சுற்றுவதற்கும், மண்டபம், மைதானம் — இவை கிடைத்தபோதெல்லாம் உபதேசம் செய்வதற்கு மட்டுமே இருப்பவர்களல்ல, இவர்கள்! பொதுப் பணி யாற்றக்கூடிய உத்யோகஸ்தர்களை யெல்லாம் கண்காணித்து, நிர்வாக சக்கரத்தைத் துடைத்து, எண்ணெய் தடவி, அதைத் தடையின்றி இயங்கச் செய்ய வேண்டியது இவர்கள் கடமை!

—ஆனால் காங்கிரஸ் கட்சி ஆட்சி பீடத்திற்கு வந்த பிறகோ இவர்கள் நிர்வாகக் கொள்கையில் அவ்வளவு அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை.

நாகரிகம் தெரியாத காட்டுமிராண்டிகளிடம் கூடை கூடையாகத் தங்க நாணயங்களைக் கொடுத்தால் அவர்கள் என்ன செய்வார்கள்?

'ஆகா? ஆயிரம் தலைமுறைக்குத் தேவையான ஆஸ்தி கிடைத்து விட்டதே!'—என்று குதூகலப்படுவார்களா?

மாட்டார்கள். 'ஏதோ பளபளப்பான மண் உருண்டையைக் கொடுத்திருக்கிறானே! இவை யனைத்தும் மாமிசமாக இருந்தாலாவது ஏதாவது பயனிருக்கும். மடையன்!'— இப்படித்தான் புலம்பக் கூடும், காட்டுமிராண்டிகள்!

அதுமட்டுமா? தங்கத்தை மண்ணுக்குச் சமானமாய் மதித்த அவர்கள் அந்தப் பசும்பொன் கட்டிகளைத் தம் குழந்தைகளிடம் விளையாட்டுப் பொருளாகக் கொடுத்திருப்பார்கள்!

—இதே கதைதான் இந்த உபகண்டத்திலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது! ஒரு முறையல்ல; பல ஆயிரம் தடவைகள்!

பொது மக்கள் வரி மூலம் தருகின்ற பொருள் இருக்கின்றதே, அது 'ஆண்டவனே நேராக வந்து' தரக்கூடிய வரப்பிரசாதத்தைவிட மேலானது! சக்தி வாய்ந்தது! பலம் பொருந்தியது!

அதை அடையப் பெறும் தேசிய வீரர்களோ காட்டுமிராண்டியிடம் சென்ற தங்கத்தைப் போல, அந்த வரிப் பணத்தை பயனற்ற காரியங்களுக்கும், பயனற்ற ஏற்பாடுகளுக்கும் வாரியிறைக்கிறார்கள்!

பழமொழி சொல்வார்கள்— 'பன்றியின் முன் எறிந்த முத்துக்களைப்போல்' என்று!

வசவாளர் நா போன்று நாற்றமடிக்கும் சாக்கடையிலே உழன்று கொண்டிருக்கும் பன்றியின் முன்னால் பளபளக்கும் முத்துக்களை வாரி எறிந்தால் என்ன பயன் கிடைக்கும்?

மன்னிக்க வேண்டும்; இன்று அதே பலன்தான் கிடைத்திருக்கிறது, காங்கிரஸ்காரர்கள் முன்னிலையில் வரிப்பணம் வாரியிறைக்கப்பட்ட போதும்!

ஊழல்! ஊழல்!—எப்பக்கம் திரும்பினாலும் ஊழல்!

தாமதம்! தாமதம்!—எங்கெங்கு காணினும் தாமதம்!

உதாரணமாக, உத்தரப் பிரதேச அரசாங்கம் மட்டும் பன்னிரண்டு வழக்குகளில் சுமார் பத்து லட்சம் ரூபாய்களை இழந்திருக்கிறது!

அந்த வழக்குகளில் தீர்ப்பு கூறிய நீதிபதிகள் அனைவரும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மையையே இவற்றிற்கெல்லாம் காரணமாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்!

● பிராந்திய ரட்சக தளம் என்பது அரசாங்க சார்புடைய இயக்கமாகும். இவர்கள் இந்த ஆண்டு அமீர்பூரில் தங்கியிருந்தனர்.

அந்தத் தொண்டர்களுக்கெல்லாம் உணவு வாங்கிக் கொடுப்பதற்காக ராம்பிரசாத் திவாரி என்பவருடனும் ஒரு வியாபாரியுடனும் பேரம் பேசி, ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள், சம்மந்தப்பட்ட அதிகாரிகள்!

ஆனால் உணவு 'சப்ளை' செய்த திவாரியோ, பிராந்திய ரட்சகர் தளம் தன்னுடைய பொருளை யெல்லாம் மிகக் குறைந்த விலைக்கே எடுத்துச் செல்வதாக உணர்ந்து. இந்த அநியாயத்தைக் கண்டிக்குமுகத்தான் நீதி மன்றத்திலே வழக்கு தொடர்ந்தார்.

ஆனால் சட்ட நிபுணர்களின் ஆலோசனைப்படி அரசாங்கம் இந்த வழக்கில் சமாதானத்தை நாடியது.

இதை மத்தியஸ்தம் செய்து வைத்த அமீர்பூர் சிவில் கோர்ட் நீதிபதி உணவு வியாபாரி திவாரிக்கு அரசாங்கம் 8.000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு கூறினர்!

● இதைப் போலவே ஒரு சமயம் ருத்ராபூரிலே உள்ள அரசாங்கப் பண்ணையைக் கண்காணித்துவரும் விவசாய அதிகாரி, அரசாங்கம் மேற்கொண்டு வாங்கிய சில காளைகளைக் கட்டிப்போட ஒரு கொட்டகை தேடி அலைந்தார்.

அவருக்கு எந்தக் கொட்டகையும் அகப்படவில்லை; புதிதாக ஒன்று கட்டுவதென்றாலோ நாள் பிடிக்கும்! அதனால் அந்த அதிகாரி சூர்மா என்பவரிடமுள்ள கொட்டகையை சில நாட்கள் உபயோகித்தார்.

ஆனால், 1949-ம் ஆண்டு, ஏப்ரல் மாதம், 5-ம் தேதியன்று வீசிய புயல் காற்றினால் அந்த மாட்டுத் தொழுவம் சாய்ந்து, குலைந்துவிட்டது. உடனே கொட்டகையின் சொந்தக்காரர் நஷ்டஈட்டாக ரூ. 5,550 கொடுக்க வேண்டுமென்று வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை விசாரணை செய்த கான்பூர் இரண்டாவது சிவில் நீதிபதி, மேற்படி சூர்மாவுக்கு அரசாங்கம் நஷ்ட ஈட்டுத் தொகையாக 5,332 ரூபாயும், வழக்கிற்கான தொகையையும், அன்றுவரை அதற்கு உண்டான வட்டியையும் கொடுத்துவிட வேண்டுமென்று உத்தரவிட்டார். அதனால் அரசாங்கம் இழக்க வேண்டியிருந்த மொத்தத் தொகை ரூ 6148—14—4.

● 1950-ம் ஆண்டின் விவசாய டைரக்டர் எல்லா ஜில்லா அதிகாரிகளுக்கும் அங்கங்கே கிடைக்கும் பருத்தி விதைகளை உடனடியாக வாங்கும்படிக் கேட்டிருந்தார். அந்தப் பூடான் ஜில்லாவைச் சேர்ந்த அதிகாரி இந்த உத்தரவு கிடைக்கப் பெற்றதும், அதை எல்லா 'சூபர் வைசர்'களுக்கும் தெரிவித்து, அந்தந்தப் பிராந்தியங்களில் கிடைக்கக் கூடிய பருத்தி விதைகளின் அளவையும், அவைகளின் தரத்தையும் உடனே தன் கவனத்துக்குக் கொண்டு வரும்படி சுற்றறிக்கை அனுப்பினர்.

குன்னூர் என்ற இடத்திலுள்ள சிஷ்பால் சிங் என்பார் வாங்கி யனுப்பியிருந்த விதைகளை மட்டும் அதிகாரி ஏற்றுக் கொள்ளவில்லை. ஒருவேளை தரக் குறைவு காரணமாயிருக்கலாம்!

ஆனால் 'வேண்டாம்' என்கிற மேலதிகாரியின் உத்தரவு கிடைத்தும்கூட மேற்படி சிஷ்பால்சிங் ராம்நாராயண் என்பவரிடம் ஐம்பது மணங்கு பருத்தி விதைகளை வாங்கிவிட்டார்.

இதைக் கேள்விப் பட்ட அதிகாரி தனது சம்மதமில்லாமல் வாங்கப்பட்ட பருத்தி விதைகள் அனைத்தையும் உடனே திருப்பிக் கொடுத்து விடும்படிக் கேட்டிருந்தார். பிறகு அந்த சிஷ்பால் சிங் அதன்படியே வாங்கிய விதைகளைத் திருப்பிக் கொடுத்து விட்டதாக 'ரிப்போர்ட்' அனுப்பினர். ஆனால் அவரிடம் எழுத்து பூர்வமான ரசீதோ, அத்தாட்சியோ ஏதும் கிடையாது.

இதற்கிடையில் ராம்நாராயண் பூடான் நீதி மன்றத்தில் தன்னிடமிருந்து அரசாங்கத்தால் வாங்கிச் செல்லப்பட்ட பருத்தி விதைகளுக்கான விலையோ அல்லது அந்த விதைகளோ இதுவரை கொடுக்கப்படவில்லை யென்றும் புகார் செய்தார்.

ஆனால் சிஷ்பால் சிங்கோ தான் மேற்படி விதைகளை அவரிடமே திருப்பிக் கொடுத்து விட்டதாகக் கூறினர்.

நீதிபதி அவருடைய சாட்சியத்தை நம்பவில்லை. மேலும் அந்த விற்பனையாளருக்கு அரசாங்கம் ரூ. 1,233—14—6 தரவேண்டுமென்றும் கோர்ட் உத்தரவிட்டது.

—இதுபோன்ற பல கவனக் குறைவுகள் காரணமாக உத்தர பிரதேசத்திற்கு நேர்ந்திருக்கும் இழப்பு 10 லட்சம் ரூபாய்கள்!

வயிற்றை எரிகிறது, வரிப் பணம் இப்படிப் பாழாவதை நினைக்கும்போது!

ஆளத் தெரியாதவர்கள் ஆட்சிக்கு வந்தால் வேறென்ன நடக்கும்; துப்பாக்கி தடியடிப் பிரயாகங்களும், ஊழலும், உருப்படாச் செலவுகளும்தான் மிச்சமாகும்! ●

நன்றி அறிவிப்பு

தேர்தல் ஆய்வுக் குழுவினரின் சுற்றுப் பயணத்தின்போது, ஆய்வுக் குழுக் கூட்டங்கள் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெறுவதற்கு ஒத்துழைப்புத் தந்த மாவட்டச் செயலாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், கழகப் பிரமுகர்கள், ஆதரவாளர்கள் ஆகியோருக்கும், ஆங்காங்கு வரவேற்பு அளித்து உபசரித்த பொதுமக்களுக்கும் எங்களின் மனமுவந்த நன்றியறிதலையும் வணக்கத்தையும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத்,
என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன்.

நீலகிரி வாழ் குறும்பர்

★ நடுக்காட்டிலும், மலைக்குகையிலும் தங்கள் வாழ்வுக் காலத்தைக் கழித்த பழங்குடி மக்கள், தங்களுக்கென்றும் தனிப்பட்ட வாழ்வு முறை – திட்ட வட்டங்கள்—தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக்கொள்ளும் எல்லைக் கோடுகள் — இவைகளைப் பெற்றிருந்த முறைகளை விளக்குகிறது இக்கட்டுரை!

நீலகிரியில் அரக்கோடு, கீர்க் கண்டிக்குக் கிழேயுள்ள பாகம், கடைஞலா, முதலிய இடங்களில் குறும்பர் வசிக்கின்றனர். பஸ்ஸில் கொஞ்ச தூரம் சென்றபின், ஐந்து ஆறு மைல்கள் மேட்டிலும் பள்ளத்திலும், காட்டிலும், சோலையிலும் நடந்தேதான் போக வேண்டும். மலபாரில் நீலப்பூர், அட்டபாடி மலையிலும், அண்ணமலையிலும், மைசூரிலும் இக்குறும்பரை வேறு பெயரில் அழைக்கின்றனர். இடத்திற்கு தகுந்தாற்போல் அவர்களின் மொழி மாறுபட்டாலும், குறும்பர்களின் மொழி தமிழ் என்று ஊகிக்கப்படுகிறது.

இவர்கள் வசிக்குமிடங்களைப் பகலில் கண்டாலும் சற்று அச்சத்தைக் கொடுக்குமென்றால், நள்ளிரவில் பல மிருகங்களின் கூக்குரலைத் தவிர வேறொன்றும் காதில் படாது. அன்னியர்கள் ஓரிரவு அவர்களின் இல்லத்திலே தங்கினால் போதும்; இரவு முழுவதும் விநாடியை எண்ணவேண்டியதுதான். ஆனால் அவர்களோ நிம்மதியாகக் குறட்டைவிட்டுத் தூங்குவார்கள்.

காட்டில் நுழைந்து நுழைந்து போகும்போது, அவர்களின் இருப்பிடங்கள் அருகில் வந்துவிட்டது என்பதற்கு அடையாளமாக வாழை மரங்கள் முதலில் தோன்றும். ஒவ்வொரு குடிசைகளின் பின் பக்கத்தில் சுமார் 5—6 வாழைச் செடிகளைக் காணலாம். குடிசைகள் மூங்கில் அல்லது காட்டுக் கொம்புகளைக் கொண்டு கட்டி, அதன் மேல் காட்டு கரும்புல் என்ற ஒரு வகை நீண்ட புற்களைக் கட்டுக் கட்டாக, மூங்கில்களின் மேல் வைத்து, வளைவு வளைவாகக் கட்டுகிறார்கள். இவர்களில் சிலர் சற்று நாகரிகமாக ஓட்டு வீடுகளும், தற்காலத்திலே அவர்களே கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுக்குள் பால் குறும்பர், முள் குறும்பர், காட்டுக் குறும்பர் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிந்திருக்கிறார்கள். ஆண்கள் குள்ளமாகவும், கறுத்துமிருக்கிறார்கள். தலையின் முன் பக்கம் க்ஷவரம் செய்து, பின் பக்கம் குடுமி வைத்திருக்கிறார்கள். நன்றாக ஓடக்கூடியவர்கள், கூர்மையான பார்வையுள்ளவர்கள். பண்டையில் ஆண்கள் கிழே ஒரு துண்டும் மேலே ஒரு துண்டும் போர்த்திக் கொண்டிருந்தார்களாம். ஆனால் இன்று சிலர் நம்மைப்போல் உடை அணிகின்றனர்.

பெண்கள் குள்ளமாகவும், கறுத்துமிருக்கிறார்கள். பயந்த சுபாவமுள்ளவர்கள். பெண்களில் சிலருடைய தேகத்தில் பச்சை குத்தியும், சிலருடைய நெற்றியில் இரண்டு அல்லது நான்கு குறுக்கு புள்ளிக் கோடுகளைப்போல பச்சை குத்தியும் இருக்கிறார்கள். அது 'சிவன் பச்சை' என்கின்றனர். காதுகளில் சிறிய வளையம் சிலரும், சிலர் ஓலையைச் சுருட்டியும் அணிந்திருக்கிறார்கள். கழுத்தில் கறுப்பு மணி சரமும், சிலர் வெள்ளி நகைகளும் அணிந்திருக்கிறார்கள். பெண்கள் பெரிய 4 அல்லது 5 கெஜத் துண்டை மார்புக்கு மேல் வேட்டி கட்டுவதைப் போல் கட்டிக்கொள்ளுகிறார்கள்.

இவர்கள் துஷ்ட மிருகங்கள் வாழும் காடுகளில் இருப்பதால் குண்டடிபட்ட துஷ்ட மிருகங்களால் சில சமயங்களில் இவர்களுக்கு ஆபத்து ஏற்படுவதுமுண்டு. இவர்களுடைய உதவியை முதலில் நாடாமல் இவர்கள் இருக்குமிடங்களுக்குப் போகமுடியாது. காரணம், பகலில் துஷ்ட மிருகங்களில்லாவிட்டாலும், அன்னியருடைய மனித வாடை அறிந்து அவர்கள் வளர்க்கும் எருமைகளும், மாடுகளும் நம்மைத் துரத்த ஆரம்பித்துவிடும்.

பெண்கள் குழந்தைகளை நம்மைப்போல் தூக்குவதில்லை. குழந்தையைத் துணியில் சுருட்டினதுபோல் எதிர்ப் பக்கம் வயிற்றில் அணைத்துக் கொள்கின்றனர். பிரசவத்திற்கு தங்கள் இனத்திலே உள்ள மருத்துவச்சி பார்த்துவிடுகிறாள். வைத்தியசாலைகளுக்குப் போவதில்லை. பிரசவமாகி பத்து தினங்கள் வரையில், தங்கள் இல்லத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது. குழந்தைக்கு ஓராண்டிலோ, அல்லது ஆறு மதாத்திலோ பெயர் கொடுப்பார்கள்.

சாதாரணமாக ஆண்கள்தான் அதிகமாக ஊருக்குள் வருகிறார்களே தவிர, பெண்கள் அதிகமாக வருவதே கிடையாது. நல்ல விசேஷமான நாட்களில் ஆண்களும், பெண்களும் சில ஆண்டுகளுக்கு முன் வரையில் மதுபானம் குடித்து, பௌர்ணமியில் தீ மூட்டி வேடிக்கையாக நடனமாடி வந்தார்கள். குறும்பர்கள் சாதாரணமாக எல்லா இறைச்சியையும் தின்பார்கள். விசேஷமாக காட்டெருமையைப் பலர் சேர்ந்து, கொலை செய்து, அதைப் பின்பு பங்கிட்டுக் கொள்ளுவார்கள். அன்றிரவும் நடனமாடுவதுண்டு. பாரை, தம்பட்டை, குழல் இம்மூன்று வாத்தியங்கள்தான் வாசிப்பதுண்டு. எப்பணி யார் செய்தாலும் எல்லோரும் ஒரே குலமென்று பெண் கொடுக்கல் வாங்கலுண்டு. இவர்கள் நடனமாடுவதைக் காணச் சென்றால், காணச் சென்றவர்கள், திரும்பும்போது வெறும் கையுடன் திரும்புவதில்லை. பழம், தேன் ஏதாவது கொடுத்து அனுப்புவார்கள்.

பொன் நகைகளைவிட' பெண்கள் வெள்ளி நகைகளைத்தான் அதிகமாக அணிகின்றனர். கழுத்தில் அணியும் வெள்ளி நகையைக் காண மிகவும் நன்றாக இருக்கிறது. அதன் பெயர் 'சொரப்பணி' என்பது.

ஆண்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் உடைந்த கண்ணாடித்துண்டால்'க்ஷவரம்'செய்து வந்தார்களாம். ஆனால் இன்று கத்தியால்செய்கின்றனர். அநாகரிகமாக இருந்தாலும் அவர்களின் குடிசைக்குள் நுழையும்போது, நம்முடைய காலணியை நீங்கும்படிக் கூறுகிறார்கள்.

ஆண்கள் தேன் சேகரித்தல், வேட்டையாடுதல், கிழங்கு பயிர் செய்தல், கூலிவேலை செய்தல், சிலர் கால்நடைகளை வளர்த்தல், காட்டில் விறகு வெட்டுதல், காட்டு மூலிகைகளைச் சேகரித்தல்—முதலிய தொழில்களைச் செய்கிறார்கள். சிலர் வேட்டை நாய்களைக்கொண்டு மான், கோழி, முயல், பன்றி முதலியவற்றை வேட்டையாடவும் பழக்கி வைத்துள்ளார்கள்.

நீலகிரியில் பெரிய தேன் கூடுகளை, குறும்பரைத் தவிர மற்றவர்களால் எடுக்கவே முடியாது. இவர்கள் தேன் கூட்டைக் கண்டதும் உடனே தேன் எடுக்கமாட்டார்கள். தேன் கூட்டை இரு கொம்புகளைக்கொண்டு, பெருக்கல் குறிபோல் வைத்துவிடுவார்கள். இக் குறியைக் கண்டதும், மற்றக் குறும்பனோ அல்லது அன்னியனோ தொடமாட்டார்கள். இரண்டு மூன்று நாட்களுக்குப் பின், தக்க ஏற்பாட்டுடன் தேன் எடுக்க வருவார்கள். தேன் எடுக்கும் முறை பலவகைப்படும்.

மைசூர் குறும்பன் யானைக்கு முன் தீப்பந்தம் பிடித்து, தன் தலைக்கு மேலே சுற்றி, குறிப்பிட்ட இடத்தை நாடி யானையை ஓட்டுவான். யானைகள் பயந்தோடும்போது, யானைக்கென்று தோண்டி வைத்திருக்கும் குழியில் யானை வந்துவிழும். அப்படி தீப்பந்தம் பிடித்தவன் ஏமாந்தால் அடுத்த விநாடி அவன் உயிருடன் காணமுடியாது. யானை வேட்டைக்குச் செல்லும் 'சிக்காரிகள்' குறும்பர்களின் உதவி இன்றி காட்டில் பிரவேசிக்கவே முடியாது.

இவர்கள் மீன் பிடிக்கும் விதமே ஒரு தனிக்கலை. ஓடையின் தலைப் பக்கம் சிறிது தூரத்திலே ஒரு வகை விஷவேர்களைத் தண்ணீரில் கரைத்துக்கொண்டே இருப்பார்கள். அவ்வேரின் வாசனை பட்டதும் மீன்கள் 'குளோரோபாம்' கொடுத்ததுபோல் மயக்கத்தால் தண்ணீரில் மிதந்து வந்து ஓடையின் சிறிது தூரத்திலே வைத்திருக்கும் கூடையில் சேர்ந்துவிடும்.

பெண்கள் வீட்டுத் தோட்டத்தைக் கவனித்தல், ஆடு மாடு, கோழி வளர்த்தல் முதலிய வேலைகளைச் செய்கிறார்கள். சிலர் கூலி வேலையும் செய்கின்றனர். ஆணும் பெண்ணும் சேர்ந்து சில செல்வர்களுடைய வயல்களில் இரவில் மிருகங்களால் பயிர்கள் சேதமாகாதவாறு இரவு முழுவதும் 'ஒய்—ஓபா' என்று குரல் கொடுத்தும், டின்னைப் பட பட வென்று

※ 4–ம் பக்கம் பார்க்க

※ 2–ம் பக்கத் தொடர்ச்சி

இருபது இடைத் தேர்தல்களில் காங்கிரஸ் தோற்றும் அவர்கள் மீதுமட்டும் இரு மொழி மாகாணத் திணிப்பு ஏன்?''—என்று பார்லிமெண்ட் அங்கத்தினர் செ. வி. காமத் கேட்கிறார்.

அதோடு மற்றொரு புள்ளி விவரம் கொடுக்கிறார். ஜனவரியிலிருந்து நடைபெற்ற இடைத் தேர்தல்களில் நூற்றுக்கு எழுபது இடத்தில் காங்கிரஸ் தோல்வியே அடைந்திருக்கிறது. 'வளர்ந்து வரும்' காங்கிரஸ் 'செல்வாக்கிற்கு' இந்தப் புள்ளி விவரம் போதாதா?

காங்கிரசில் ஊழலும் சுயநலமும் மலிந்துவிட்டது!

போன தேர்தலில் நாடெங்கும் போட்டியிட்டு 47 சதவிகிதம் ஓட்டுக்களையே காங்கிரஸ் பெற முடிந்தது.

புள்ளி விவரங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்வோம்! ஜன நாயகம் வாழ — குடியாட்சி தழைக்க — காங்கிரஸ் மடிய வேண்டும். தமிழனின் தன்மானம் வாழ உயிர் நீத்த தியாகி சங்கரலிங்க (நாடார்)த்தின் பெயரால், மக்களுக்குச் சொல்லுவோம்!

★ பாட்டியும் - பாலகனும்! ★

புதுச்சேரி கனகசபை என்பார் ஒருவர் இருந்தார். அவருக்கு இளையவன்; முதியவன் ஆக இரு புதல்வர்கள். இளையவன் ரத்தினம் படுசுட்டி—குறும்புத்தனம் மிகுந்த தமிழ் இளம் சிங்கம் — சிங்காரச் செல்வன்.

ரத்தினத்திற்கு ஓர் பொக்கை வாய்ப் பாட்டி. அந்தப் பாட்டி மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்தான். ஆனால் அந்த ஓர வாஞ்சைக் கிழவியோ, முதியவன்மீது அன்புக் கயிற்றை இணைத்திருந்தார்கள்.

அதனால் சின்னத் தம்பி ரத்தினத்தின்மீது அந்த அன்புக் கயிறு படாமலில்லை. சாதாரண கவனிப்புதான். அதிக அன்போ பெரியவனிடம். சின்னவனிடம் 'சிறுதூரல்' பொழிந்தது. பெரியவனிடமோ 'பெரு மழை' தான்! காரணம்தான் ஏனோ?

தான் அதிகம் அன்பு செலுத்தியும், அவர்கள் கண்ணோட்டமெல்லாம் வேறிடம் திரும்புவது ரத்தினம் அறியாதது இல்லை.

ஒருநாள் சமயம் வாய்க்கட்டும், சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்றிருந்தானோ என்னவோ? அந்த வாய்ப்பும் வந்தது.

ஒரு நாள், அந்த பொக்கை வாய் பொல்லாத கிழவி ஒரு சீப்பு வாழைப் பழத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தப் பழங்களை ஆள் — முறை வகுத்து பகிர்ந்து தந்தார்கள். சின்னவன்—பெரியவன் முறை பெற்றுக் கொண்டனர்; தின்றனர்.

※

சின்னவன் ரத்தினம் எங்கோ சென்று திரும்பி வந்தான்; நுழைந்தான் வீட்டினுள்.

கிழவி தன் அண்ணனிடம் பேசும் பேச்சுக் குரல் கேட்டது அதுவும் தன்னைப் பற்றியும் பேசுவதாகத் தெரிந்தது. மறைந்திருந்து கேட்டான்:

"ரத்தினம் வரப்போறான். நீ போய் அந்த அறையில், அலமாரியில்,மேல்தட்டில் வாழைப் பழம் வைத்திருக்கிறேன். அதை யாருக்கும் தெரியாமல் 'கப் சிப்' பென சாப்பிட்டு வா. போ, போடா" என்றார்கள். அவசரப்படுத்தினார்கள்.

ரத்தினமோ இந்தப் பொல்லாக் கிழவிக்கு பாடம் கற்பிக்க சரியான சமயம் வாய்த்தது கண்டு, மனதிற்குள் வந்தனம் செலுத்தி, அவ்விடம் விட்டு அகன்றான்.

※

பாட்டி சொன்னபடி அலமாரியை ஆவலுடன் திறந்த பெரிய பையனின் கண் முன்னே 'காலி'த் தட்டுதான் தெரிந்தது. கீழே கிடந்த வாழைப் பழத் தோல்கள் மட்டும், 'எல்லாம் உன் தம்பியின் செயல்தான்' என்று சொல்லிக் கொண்டிருந்தது. அண்ணனுக்கு அழுகையே வந்துவிட்டது. நேராகப்பாட்டியிடம் வந்து முறையிட்டான்.

பெரியவன் சொன்னதைக் கேட்டு கிழவி கடுங்கோபம் கொண்டு தன் மகன்-கனகசபையிடம் குற்றப் பத்திரிகை வாசித்தார்கள்.

அவர், 'அவன்' வரட்டும் என்றிருந்தார் தண்டனை தர.

அவனும் (ரத்தினம்) வந்தான். தந்தை அழைத்தார். அருகில் வந்தான். யாதும் அறியாதவன்போல் அலட்சியத்துடன் நின்றான்.

கனகசபை "கடுங்கோப" பாவனை காட்டி, அதட்டி, உருட்டி, மிரட்டி "வாழைப் பழத்தை எடுத்தாயா?" என்று விசாரித்தார்.

தயங்காது, "ஆம். எடுத்தேன். இந்தப் பெருங் கிழவி செய்ததைவிட நான் செய்தது எந்த விதத்திலும் தவறல்லவே!" என்று கூறி, ஓர் கருத்துக் கவிதையை இயற்றி, ஏட்டில் எழுதி, தந்தையிடம் நீட்டினான்.

அவர் அதைப் படித்துவிட்டு 'ஓகோ' வெனச் சிரித்தார். பொக்கை வாய்க் கிழவியும் என்ன என்று கேட்டார்கள், ஆவலோடு.

ஏட்டை நீட்டினார், தாயிடம் கனகசபை.

சற்று உரக்கப் புராணம் படிப்பதுபோல் படித்தார் பாட்டி!

"பழங்கலத்திலே பழங்களைத்
தான்
பார்த்துத் தேடி பயல்களைத்
தான்கிழங்களைத்தான் உதைக்க
வேண்டும்
கெடுநினைப்பே அதிகமப்பா.

ஒழுங்குபட வாழைச் சீப்பில்
ஒன்று விழுக்காடு தந்தாள்.
விழுங்கிடவே அண்ணுவுக்கு
மீத்துக்கொடுக்க மறைப்ப
தென்ன?".

—இதைக் கேட்ட எல்லோரும் கொல்லெனச் சிரித்தார்கள்.

"உனக்கும் சொல்வேன்; பிறர்க்கும் சொல்வேன்; எனக்கும் சொல்லிக்கொள்கிறேன். நல்லவைகள்—எந்த உண்மையையும்" என்று அறிஞர் அண்ணு கூறுவதுபோல், இளமையிலேயே தன் குற்றத்தையும் சாடி, பாட்டி செய்ததையும் காட்டி, நீதி கற்பித்த அந்த இளஞ் சிறுவனை யார் தான் பாராட்டாது இருப்பர்கள்.

அந்த இளம் கவி—செல்வன் யார் தெரியுமா? 'அவர்-இவர்' என்று சொல்லிட, இன்று தமிழ் நாட்டில், பாரதிக்குநிகரென ஒருவர் உண்டு என்று பாரதியாலே பாராட்டுபெற்ற, திராவிடத்து புரட்சிக் கவி மட்டுமல்ல; கருத்துக் கவி பாரதிதாசன்தான்—கனகசுப்புரத்தினம்!

●

அய்யோ—அவமானம்! அவமானம்!



"தம்பிகளே! தங்கைகளே! தீபாவளியை முன்னிட்டு உங்களுக்கு இரண்டு நாட்கள் பள்ளி கிடையாது!"

"தீபாவளியா? அப்படி என்றால் என்ன சார்?"

"அடப் போக்கிரிப் பெண்ணே! தெரியாதா உனக்கு அந்தக் கதை...? அந்தக் காலத்தில்..."

"எந்தக் காலத்தில் சார்? கி. மு. விலேயா? கி. பி. யிலேயா?..."

"பேசாமல் கேள்! இரண்யாட்சதன் என்ற அரக்கன் ஒருவன் இருந்தான். அவன் உலகத்தைப் பாயாகச் சுருட்டி..."

"ஐயையோ! உலகம் உருண்டைன்னு நீங்கள் படிச்சுப் படிச்சுச் சொல்வீங்களே, சார்! அதை எப்படிப் பாயாகச் சுருட்ட முடியும்? ... ஊம்?..."

"அடாடாடா! குறுக்கே பேசாதேடி!...அந்தச் சுருட்டிய உலகத்தை என்ன செய்தான் தெரியுமா? தூக்கிக் கொண்டு கடலுக்குள் போய் ஒளிந்து கொண்டான்..."

"இதென்ன அபாண்டம் சார்! நீங்கதானே சற்று முன்பு உலகத்தின் ஒரு பகுதி நீர்; ஒரு பகுதி நிலம்—என்று சொன்னீர்கள்! உலகமே சுருண்டு விட்டதே: அப்புறம் இந்தப் புதுக் கடல் ஏது சார்?..."

"சட்...பேசாமல் கேள்!..."

"அதெப்படி சார்? கடலுக்குள்தான் எத்தனை நேரம் இருக்க முடியும்? மூச்சுத் திணராதா? மரணம் நேராதா? அல்லது திமிங்கிலங்கள்—சுறுக்கள்தான் சும்மா விடுமா?"

"அதெல்லாம் அப்புறம்...உடனே மகா விஷ்ணு கோபம் கொண்டு விட்டார். மறுகணம் பன்றி உருவம் எடுத்தார்: கடலுக்குள் புகுந்தார்."

"பன்றிக்கு நீந்தத் தெரியுமா சார்?"

"கடலுக்குள் சென்று அரக்கனைக் கொன்றார். பூமியை மூக்கில் சுமந்து கொண்டார்..."

"அய்யோ; அய்யோ! உலகம் என்ன நான் போட்டிருக்கிற மூக்குத்தி மாதிரியா சார்? அது என்ன கனம் இருக்கும்..."

"பேசாமல் கேளடி! தன்னைக் காப்பாற்றிய பன்றியின்மேல் பூமிக்கு ஆசை; உடனே கல்யாணம்!"

"ஐயையோ! எனக்கு வெட்கமா இருக்கு சார்! இப்படியும் நடக்குமா?"

"நடந்திருக்கேடி!...கல்யாணம் முடிந்ததா? குழந்தையும் பிறந்தது. அவன்தான் நரகாசுரன்—தேவர்களுக்கெல்லாம் தொல்லை கொடுத்தான். உடனே கடவுள் பொறுப்பாரா? கிருஷ்ணன் உருவெடுத்து போர் செய்து மயங்கி விழுந்தார்."

"கடவுளுக்கே தொல்லையா? சர்வ வல்லமையும் எங்கே சார் போயிற்று?..."

"எங்கேயும் போகவில்லை. பாமாவிடம்தான்! ஆமாம்: அவள்தான் நரகாசுரனைக் கொன்றாள். அந்த நாள் தான் தீபாவளி! தெரிகிறதா?"

"தெரிகிறது சார்! நல்ல குப்பைக் கதை இது! இதற்கு ஒரு பண்டிகையாம் - விடுமுறையாம்-தின்பண்டங்களாம்-புத்தாடைகளாம்! வெட்கக்கேடு! வெட்கக்கேடு! எனக்கு வேண்டாம் சார் விடுமுறை! நான் மட்டும் பள்ளியில் வந்து படித்துக்கொண்டிருப்பேன்! ஆமாம்..."

"சீ! சீ! வாயை மூடடி, வாயாடி!"

கடைசிப் பக்கம்

எழுத்தாணி

ரகுநாதன் ; பரம்பை

(?) இறந்த காலத் தோல்விகளையே நினைத்து நினைத்து ஏங்கிக் கொண்டிருந்தால்...?

கேழ் காலத்திற்கு வேண்டிய சக்தி பாழாகும் ; எதிர்கால நம்பிக்கையும் நாசமாகும் !

செஞ்சித் தோழன் ; செஞ்சி

(?) உலகில் ஏமாற்றி வாழுகிறவர் கூட்டத்தை ஏன் தான் இந்த ஆண்டவன் படைத்தான் ?

தவறு நண்பரே, ஆண்டவனைப் படைத்தவர்களே அவர்கள் தானே !

சிவசண்முக சுந்தரம்;
மேலகற்கண்டார் கோட்டை

(?) இருண்டு கிடந்த நாட்டில் சுதந்திர தீபத்தை ஏற்றி வைத்தது காங்கிரசல்லவா— அதற்கும் எதிர்ப்பா ?

நீர் குறிப்பிடும் அந்த சுதந்திர தீபம் வீட்டு விளக்கல்ல; காட்டுத்தீ தோழரே !

கில்பர்ட் ; திருவல்லிக்கேணி.

(?) அழையாத விருந்தாளி எது என்று சொல்ல முடியுமா ?

'சாவு'மட்டும்தான் நண்பரே எந்த வேறுபாடுமின்றி எல்லோரையும் ஒன்றாக வரவேற்கும் !

கு. செல்வமணி, பறக்கை

(?) தமிழில் ஆட்சிமொழி நடத்த தகுந்த வார்த்தைகள் இல்லை என்று விநோபா கூறுகிறாரே, அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள் ?

காமத்துப்பாலை வள்ளுவர் எழுதியிருக்க மாட்டார் — என்று சந்தேகப்பட்ட விநோபா தானே, அவருக்கேப்படி தோழரே தமிழின் பெருமை புரியும் ; அரை குறைதானே !

ஏ. கமலநாதன் ; கிருஷ்ணகிரி

(?) அன்பின் எல்லையைக் காண முடியுமா ?

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள் முதலில், வானத்தின் எல்லையைக் காணமுடியுமா ?

கிருஷ்ண காந்தன், பூந்தமல்லி

(?) அரசியல் ஒரு சூதாட்டம் என்கிறார்களே, உண்மையா ?

வெட்டுக் காய்களாக மக்களைக் கருதிக்கொண்டிருக்கும் தருமர்களுக்கு அரசியல் மட்டுமல்ல; வாழ்க்கை, குடும்பம்-ஏன்— மனைவி மக்கள்கூட சூதாட்டம் தான் தோழரே !

கமலத்தியாகராசன், காட்டு
மன்னார் கோவில்

(?) சாதனை — போதனை — விளக்கம் தருவீரா ?

செய்ய முடிந்தவன் சாதிப்பான்; முடியாதவன் போதிப்பான் !

நண்பர் குழாம்; நெய்வேலி

(?) திருவள்ளுவரின் உண்மை உருவமும், அவருடைய சமயமும் என்ன ?

திருக்குறள்தான் திருவள்ளுவரின் உண்மையான உருவம்—சுயமரியாதைதான் அவரது சமயம் !

"வெள்ளி வீதி"

முக்கிய அறிவிப்பு !

வெள்ளிவீதிக்கான தனி அச்சகம் நிறுவும் முயற்சியில் ஈடுபட்டு, அந்த முயற்சி இரண்டொரு வாரங்களில் நிறைவேற இருக்கிறது. அதற்கான தீவிர ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டியிருப்பதால் "வெள்ளி வீதி" அடுத்த இதழ்—நவம்பர் 10-ம் நாள்தான் வெளி வரும். அந்த இதழில் மு. கருணாநிதியின் "என்னைப்பற்றி !" என்ற தொடரோவியம் ஆரம்பமாகிறது ! அதற்கான விளம்பரச் சுவரொட்டிகள் தயாராகி வருகின்றன. ஏஜெண்டுகள் கூடுதல் பிரதிகட்கு முன்னதாக அறிவிக்க வேண்டுகிறோம். மேலும் பட்டியல் பாக்கி தரவேண்டியவர்கள் உடனடியாக அனுப்பிவிட வேண்டுகிறோம்.

நிர்வாகி, 'வெள்ளி வீதி' :: சென்னை-6.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு சென்னை-6.